## எடப்பாடிக்குப் புரியாததில் பெரிய ஆச்சரியம் இல்லை!

# திராவிட மாடல் ஆட்சியில் மருத்துவத் துறையின் வளர்ச்சி ஐக்கிய நாடுகள் சபை வரை எட்டியுள்ளது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!



வேலூர், ஜூன் 25-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.06.2025) வேலூர் பென்ட் லேண்ட் அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துமனையை திறந்து வைக்கவுள்ளதை முன்னிட்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (24.06.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு புதிய மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது.

208 மருத்துவமனைகள் இன்றைக்கு பணி முடிந்து இருக்கிறது. அதேபோல் ஒரு நீண்ட கால இடைவெளிக்கு பிறகு தமிழ்நாட்டில் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் முழுமையாக கட்டப்பட்டு அதற்கு பணி நியமனங்களும் முடிவுற்று இந்த இரண்டு மருத்துவ அமைப்புகளும் ஏறத்தாழ 258 மருத்துவமனைகள் வருகிற ஜூலை 3ஆம் தேதி சென்னை வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அடையாறு சாஸ்திரி மூன்றாவது தெருவில் கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனையை நாட்டின் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அங்கிருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 258 மருத்துவமனைகளை திறந்து வைக்க உள்ளார்கள்.

இப்படி பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ந்து தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வரின் வழிகாட்டுதலோடு இந்தியாவில் மட்டுமல்ல உலக அளவில் 4 1/2 லட்சம் சதுர அடி பரப்பில் ஒரு குழந்தைகளுக்கான பிரத்யேக மருத்துவமனை 20 சிறப்பு துறைகளுடன் கூடிய ஒரு சிறப்பு மருத்துவமனை உலகின் எந்த நாட்டிலும் இல்லாத ஒன்று. குழந்தைகளுக்கான பிரத்யேகக மருத்துவமனைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தந்து தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் நிதி ஆதாரத்தோடு அந்த மருத்துவமனை கட்டுவதற்குரிய இடம் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் போடப்படும் நிலைக்கு வந்திருக்கிறது. வருகிற செப்டம்பரில் பணி தொடங்கப்படும் நிலையும் உருவாகி இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே பெரிய அளவில் ஒரு மிகப்பெரிய மருத்துவமையமாக குழந்தைகளுக்கான மருத்துவ மையமாக சைதாப்பேட்டையில் அமையவிருக்கிறது.

இதேபோல் ஏராளமான மருத்துவ கட்டமைப்புகள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளாக மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்த அரசு பொறுப்பேற்கும் போது மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் 19 இடங்களில் மட்டுமே இருந்தது. இன்றைக்கு புதிதாக 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக 6 இடங்கள் என்று 25 மருத்துவமனைகளை கட்டுவதற்கு திட்டமிட்டு 1018 கோடி ரூபாய் நிதி ஆதாரத்தையும் தந்து, அந்த பணிகள் எல்லாம் தற்போது முழுமையாக நிறைவேறும் நிலையில் இருக்கிறது.

கட்டிட பணிகளைப் பொறுத்தவரை 100% முழுமையாக நிறைவு பெற்று இருக்கிறது. இதில் 560 படுகைகள் வரவிருக்கிறது. 11 அறுவை சிகிச்சைகள் அரங்கங்கள் உள்ளது. தரை தளத்தைப் பொறுத்தவரை வரவேற்பு, புறநோயாளிகள் பதிவு மையம், பிரசவ அறை, மகப்பேறு அவசர சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை அறுவையரங்கம், மருந்தகம், மத்திய கிருமி நீக்க சேவைகள் துறை மற்றும் சலவை துணி தொகுதி என்று பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் தரைத்தளம். அதேபோல் ஒவ்வொரு தளத்திலும் முதல் தளத்தில், இரண்டாவது தளத்தில், மூன்றாவது தளத்தில் என்று பல்வேறு சிறப்பு வசதிகள் கொண்ட கட்டமைப்புகளுக்கான பணிகள் முடிவுற்றிருக்கிறது. 7 ஆம் தளத்தை பொறுத்தவரை ஒரு அறுவை அரங்கம், 10 அறுவை அரங்குகள் ஒரே தளத்தில் வரவிருக்கிறது. அதில் மூன்றுக்கு உபகரணங்கள் எல்லாம் பொருத்தப்பட்டு இருக்கிறது. இன்னமும் 7 அறுவை அரங்குகளுக்கு தேவையான உபகரண மருத்துவ உபகரணங்கள் படிப்படியாக பொருத்தப்படவிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

இந்த ஆய்வின்போது வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் மா.சுனில்குமார், முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், கூடுதல் இயக்குநர் மருத்துவக்கல்வி மரு.தேரணிராஜன், வேலூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை முதல்வர் மரு. ரோகிணிதேவி உட்பட பலர் உடனிருந்தனர்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 125 வது நாள்!

### கொளத்தூர் பகுதியில் – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினர்!



சென்னை, ஜூன் 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டு ள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் அமைச்சர் அர. சக்கரபாணி, 30வது நாள் அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், 50வது நாள் அமைச்சர் ஆர்.காந்தி , 75வது நாள் அமைச்சர் மா.சுப்பிரமணியம், 100வது நாள் அமைச்சர் எ.வ.வேலு, கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தனர்.

தொடர்ந்து 125 வது நாளான நேற்று (24.6.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி, 68வது வார்டு, கொளத்தூர், கம்பர் நகர், வால்மீகி தெரு மற்றும் 66அவது வார்டு, வெற்றி நகர், பூபதி தெரு சந்திப்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார். இச்சிறப்பு மிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டமானது நேற்றுடன் (24.6.2025) தற்பொழுது 125 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பசிப்பிணியை போக்கும் ஒரு அற்புதமான அன்னம் தரும் அமுதக்கரங்கள் நிகழ்ச்சியை அண்ணியார் திருமதி.துர்கா ஸ்டா லின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியை முன்னெடுத்த அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை வாழ்த்துகிறேன்.

பட்டா வழங்கும் நடைமுறையை எளிமையாக்கி இருக்கிறோம் எத்தனை நபர்களுக்கு வழங்கி உள்ளோம் என்ற கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில்: 16 லட்சம் பேருக்கு பட்டா கொடுத்து இருக்கிறோம். 1962ஆம் ஆண்டு நகரத்தில் குடி யிருக்கும் நபர்களுக்கு பட்டா கொடுக்க கூடாது என இருந்தது அதனை மாற்றி இன்றி நகரத்தில் இருப்பவர்களுக்கு பட்டா வழங்கி வருகிறோம். சென்னை மற்றும் சென்னையை சுற்றி உள்ள மக்களுக்கு பட்டா வழங்கி உள்ளோம். இது அந்த மக்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கிறது.

தென் மாவட்டங்களில் பெய்த கனமழையால் பாதிப்பு ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில்:

இயல்பான அளவில் தான் மழை பெய்துள்ளது. பெரிய அளவில் பாதிப்பு எதும் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் ஒரு சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டது அதனையும் சரி செய்துள்ளோம் எனவும் மழையால் தென்மாவட்டங்களில் பெரிய பாதிப்பு இல்லை. சர்வே எண் மற்றும் பட்டா விவரங்களை பெறுவதை எளிதாக்கும் வகையில் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும். அதற்கான பணிகள் ஒவ்வொன்றாக நடைபெற்று வருகிறது. அந்த செயலியை மக்கள் பயன்படுத்தும் போது அது எளிதாக இருக்க வேண்டும் என நினைக்கிறோம் எனவும் எந்த அளவிற்கு மக்கள்புரிந்துக்கொள்ளும் வகையில் செயலி அறிமுகப்படுத்தப்படும் எனவும் சர்வே எண் மற்றும் பட்டா விபரங்களை, மொபைல் போன் வாயிலாக அறிவதற்காக வருவாய்துறை உருவாக்கி வரும் புதிய செயலி இந்த ஆண்டுக்குள் நடைமுறைக்கு வரும்.

வடகிழக்கு பருவமழைக்கான ஏற்பாடுகள் எந்த அளவில் உள்ளது என்ற கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில்:

வடகிழக்கு பருவமழையை பொறுத்த வரை அனைத்து பணிகளையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. வருவாய் துறையில் உள்ள பேரிடர் துறையும் அதற்கான பணிகளை செய்து கொண்டு உள்ளோம், இதுவரைக்கும் எந்த மிக பெரிய பாதிப்பும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், எ.நாகராசன், ஐ.சி. எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத்பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத் துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

## என்.ஆர்.இளங்கோ எம்.பி. பங்கேற்பு

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# தி.மு.க. சட்டத்துறை DLC-CLC-Div.LC-FLC-2026 சட்டமன்ற தேர்தல் பயிற்சி பாசறைக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் தி.மு.க. சட்டத்துறை DLC-CLC-Div.LC-FLC 2026 சட்டமன்றத் தேர்தல் பயிற்சி பாசறைக் கூட்டம் (27.06.2025 வெள்ளிக்கிழமை) அன்று மாலை 3.30 மணியளவில் காஞ்சிபுரம் எம்.எம். லேகசி ஓட்டல் கூட்டரங்கில் எனது (க.சுந்தர்) தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் சட்டத் துறை செயலாளர் என். ஆர்.இளங்கோ எம்.பி. கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

கூட்டத்தில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் DLC-CLC-Div. LC-FLC ஆகியோர் மட்டும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் பணி சம்மந்தமாக.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

---



# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஹரிஹரசுதன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.6.2025 | தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம் | ஆண்டிநாயக்கன் வலசு | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 2 | | கீரனூர் பேரூர் | கலைஞர் திடல் | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 3 | | வடமதுரை மேற்கு ஒன்றியம் | கம்பிலியம்பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 4 | | வடமதுரை பேரூர் | ஏ.வி.பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 5 | 28.6.2025 | தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம் | தொப்பம்பட்டி | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 6 | | தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் | கரியாம்பட்டி | ம.சையது முஸ்தப்பா<br>அ.சுஹாசினி |
| 7 | | வடமதுரை கிழக்கு ஒன்றியம் | புத்தூர் | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 8 | | அய்யலூர் பேரூர் | ஏ.கோம்பை | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 9 | | ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் | விருப்பாட்சி | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 10 | 28.6.2025 | ஒட்டன்சத்திரம் நகரம் | தும்பிச்சம்பட்டி சத்யா நகர் | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 11 | | சாணார்பட்டி தெற்கு ஒன்றியம் | கோபால்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 12 | | சாணார்பட்டி வடக்கு ஒன்றியம் | அதிகாரிப்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 13 | 29.6.2025 | ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியம் | கொல்லப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>வ.ராஜேஸ்வரி |
| 14 | | ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் | இடையகோட்டை | ம.சையது முஸ்தப்பா<br>வ.ராஜேஷ்வரி |
| 15 | | வேடசந்தூர் தெற்கு ஒன்றியம் | பூத்தாம்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 16 | | வேடசந்தூர் பேரூர் | மாரியம்மன் கோயில் தெரு | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 17 | | நத்தம் தெற்கு ஒன்றியம் | வத்திப்பட்டி | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 18 | | நத்தம் பேரூர் | நல்லகுளக்கடை | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 19 | | நத்தம் வடக்கு ஒன்றியம் | அனக்காட்டூர் | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மெர்லினா |
| 20 | 30.6.2025 | வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் | வீரப்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 21 | | எரியோடு பேரூர் | குருக்காளையன்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 22 | | குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம் | நொச்சிப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 23 | | குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம் | பல்லாநத்தம் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 24 | | பாளையம் பேரூர் | சிலும்பாகவுண்டனூர் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |

**திண்டுக்கல்**

நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023



---

## வட்டச் செயலாளர் மு. இ. ஏழுமலை தலைமையில்

# 123வது வட்டத்தில் பாக முகவர்கள் கலந்தாய்வுக் கூட்டம்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - நந்தனம் கி.மதி - கோ.வி.லெனின் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 25-

தென்மேற்கு மாவட்ட செயலாளரும் மயிலை சட்டமன்ற உறுப்பினர் த. வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, தொகுதி பார்வையாளர் கோ.வி லெனின் ஆகியோர் முன்னிலையில், 123 வது வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் பாக முகவர்கள் BLA 2,BLC கலந்தாய்வுக் கூட்டம் இன்று (25.06.2025 - புதன்கிழமை) மாலை 6:30 மணி அளவில் சி.பி.ராமசாமி சாலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெறகிறது.

இதில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் பணி சம்பந்தப்பட்ட முக்கிய ஆலோசனைகள் வழங்க உள்ளதால், 123 வது வட்டத்திற்கு உட்பட்ட மாநிலம், மாவட்டம், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள், BLA 2 BLC உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

---



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதியை சேர்ந்த 16 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி துறை சார்பில் இயந்திரம் பொருத்ததப்பட்ட மூன்று சக்கர வாகனங்களை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் இரா.அறிவழகன், கே.ஜி.நமச்சிவாயம், எம்.கேசவன், மு.பாஸ்கரன், எஸ்.உதயகுமார், அப்துல்கரீம், டி.ஜெ.ஜி.தமிழரசன், என்.எஸ்.மூர்த்தி, புருஷோத்தமன், எம்.அருள், பா.சுரேஷ், மோகனசுந்தர், கே.வி.நாகராஜ், எம்.முனிவேல், டி.மோகன், இ.எம்.ராஜேஷ், சண்முகம், அங்கமுத்து, கே.என்.பழனி, கே.வி.ரவி ஏ.பி.ஆனந்தராஜ், குப்பன், டார்லிங் ராஜா, பி.பார்த்தசாரதி, தமிழ்சாதிக் ஆகியோர் உடன் இருந்தனர்.